ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை—600 006

பத்திரிக்கைச் செய்தி

2018—2019ம் ஆண்டிற்கு வட்டார கல்வி அலுவலருக்கான கணினி வழித் தேர்வு 14.02.2020, 15.02.2020 மற்றும் 16.02.2020 தேதிகளில் (காலை/மதியம்) நடைபெற உள்ளது. இத்தேர்விற்கு உரிய மாவட்டத்தின் அனுமதி சீட்டு (Admit Card) ஆசிரியர் தேர்வு வாரிய இணையதள முகவரி www.trb.tn.nic.in –ல் தேர்வர்கள் தங்களது User ID மற்றும் கடவுச் சொல் (Password) உள்ளீடு செய்து 07.02.2020 முதல் பதிவிறக்கம் செய்யும் வகையில் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டது. இதில் தேர்வர்கள் தங்களது தேர்வு மையத்தின் மாவட்டம் / நகரம் மட்டுமே அறிந்து கொள்ளும் வகையில் வெளியிடப்பட்டது.தற்போது தேர்வர்கள் தங்களது தேர்வு நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் தேர்வு மையத்தின் பெயரைத் தெரிந்து கொள்ளும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே தேர்வர்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் தங்களது User ID மற்றும் கடவுச் சொல் (Password) உள்ளீடு செய்து தேர்வு மையத்தின் பெயர் மற்றும் முகவரியினை பதிவிறக்கம் செய்யும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

**தேர்வர்கள் தேர்வு மையம் குறிப்பிட்டுள்ள Admit card-ஐ கண்டிப்பாக பதிவிறக்கம் செய்து தேர்வு நாளன்று தேர்வு எழுதும் மையத்திற்கு எடுத்து சென்று உரிய அறிவுரையை பின்பற்றி தேர்வு மையத்தில் தேர்வினை எழுத அறிவுறுத்தப்படுகின்றது.**

| தேர்வு தேதி | | அனுமதி சீட்டு வெளியிடும் நாள் |
|---|---|---|
| 14.02.2020 | – | 10.02.2020 |
| 15.02.2020 | – | 11.02.2020 |
| 16.02.2020 | – | 12.02.2020 |

நாள் : 10 .02.2020

தலைவர்